# தமிழ்நாடு அரசு
# பலவகை தொழில்நுட்பக் கல்லூரி சேர்க்கை-2023
## தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 600 025
2023-24-ஆம் ஆண்டிற்கான பட்டயப்படிப்பு மாணாக்கர்கள் சேர்க்கை
(தமிழ்நாடு மாணாக்கர்களுக்கு மட்டும்)

**விளம்பர அறிவிக்கை எண். 16328 /ஐ-1/2023, நாள். 19.05.2023**

தமிழ்நாடு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான முதலாமாண்டு மற்றும் பகுதி நேரப் பட்டயப்படிப்பிற்கு விண்ணப்பிக்கவும், கீழ்க்கண்ட இணையதளத்தில் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை: https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவுசெய்ய வேண்டும். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் மாவட்ட சேவை மையங்கள் (TNEA Facilitation Centre) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

**கல்வித் தகுதி :**

1. **முதலாமாண்டு பட்டயச் சேர்க்கை : (1st Year Diploma Course)**

பத்தாம்வகுப்பு (SSLC / Matriculation) தேர்ச்சி (அல்லது) அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி

**2. பகுதிநேர பட்டயச் சேர்க்கை; (Part-Time Diploma Course)**

தகுதி: 10 / 10th + (2 years ITI) / 10th + (2 years Experience) படிப்பிற்கான கால அளவு- 4 வருடங்கள்

**பதிவுக்கட்டணம் :** பதிவுக் கட்டணமான ரூ.150/-ஐ விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதள வாயிலாக செலுத்தலாம்.

SC/ST பிரிவினர் பதிவுக் கட்டணம் செலுத்த அவசியமில்லை.

| | |
|---|---|
| முதலாமாண்டு, பகுதிநேர பட்டயப் படிப்பிற்கான, இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள் | 20.05.2023 |
| முதலாமாண்டு, பகுதிநேர பட்டயப் படிப்பிற்கான, இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் | 09.06.2023 |
| 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், சிறப்பு பிரிவினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் புகைப்படம் ஆகியவை தேவையான அளவுகளில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். | |

அனைத்து தகவல்கள், வழிகாட்டி மற்றும் தொலைபேசி எண்கள் மாணாக்கர்கள் https://www.tnpoly.in இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**ஒம்./- இரா. லலிதா**
**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்**